**செய்தி வெளியீடு எண்: 473** **நாள்: 07.08.2019**

<u>செய்தி வெளியீடு</u>

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் தலைமையில் இன்று (7.8.2019) தலைமைச் செயலகத்தில், காஞ்சிபுரம், அருள்மிகு வரதராஜ பெருமாள் கோவிலில், ஸ்ரீ அத்தி வரதரின் நின்ற திருக்கோலத்தை தரிசிக்க தினந்தோறும் அதிக அளவில் பக்தர்கள் வருகை புரிவதால் அவர்களுக்கு செய்யப்பட்டு வரும் கூடுதல் வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இப்பொருள் சம்மந்தமாக ஏற்கனவே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் கடந்த 20.7.2019 அன்று தலைமைச் செயலகத்திலும், 23.7.2019 அன்று காஞ்சிபுரத்திலும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. மேலும், காஞ்சிபுரத்திற்கு நேரில் சென்று பக்தர்களுக்கு செய்யப்பட்டுள்ள போக்குவரத்து வசதிகள், உணவு மற்றும் குடிநீர் வசதிகள், சுகாதார வசதிகள், மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் செல்லும் பாதைகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டார்கள். மேலும், தரிசனத்திற்கு வருகை தந்த பக்தர்களிடம் ஸ்ரீ அத்தி வரதர் வைபவத்திற்கு செய்யப்பட்டுள்ள வசதிகள் குறித்தும், தரிசனம் செய்வதற்கு ஆகும் நேரம் குறித்தும் நேரடியாக கேட்டறிந்தார்கள்.

இன்று (7.8.2019) தலைமைச் செயலகத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில், ஸ்ரீ அத்தி வரதர் வைபவம் வருகின்ற 17.8.2019 அன்றுடன் நிறைவடைய உள்ளதால், தமிழ்நாடு மட்டுமல்லாமல் பிற மாநிலங்களில் இருந்தும் அதிக எண்ணிக்கையில் பக்தர்கள் தொடர்ந்து வந்து கொண்டிருப்பதால், மாவட்ட நிர்வாகம் இதுவரை மேற்கொண்டு வரும் ஏற்பாடுகள் குறித்தும், மேலும் கூடுதலாக மேற்கொள்ளப்பட வேண்டிய வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்தும் துறை வாரியாக விரிவாக விவாதிக்கப்பட்டது.

அப்போது கீழ்க்கண்ட உத்தரவுகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்தார்கள்.

- **காஞ்சிபுரத்திற்கு அதிகமான வாகனங்களும், மக்கள் கூட்டமும் வருவதால், கூடுதல் வாகனங்களை பள்ளி, கல்லூரி வளாகங்களில் நிறுத்தவும், அப்பகுதிகளில் பக்தர்கள் ஓய்வெடுத்து செல்வதற்கு வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும்.**

- **வயது முதிர்ந்தவர்களும், மாற்றுத் திறனாளிகளும் அமர்ந்து செல்ல கூடுதல் வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும்.**
- **தூய்மைப் பணிகளை தீவிரப்படுத்த, கூடுதல் துப்புரவு பணியாளர்களை பெருநகர சென்னை மாநகராட்சியிலிருந்து அனுப்ப வேண்டும்.**
- **பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகரிக்க, கூடுதல் காவலர்களை நியமிக்க வேண்டும்.**
- **பக்தர்களுக்கு குடிநீர், உணவு போன்றவைகளை சுகாதாரத்தோடு வழங்குவதை கண்காணிக்க வேண்டும்.**
- **அத்தி வரதர் வைபவத்தில் பாதுகாப்பு உள்ளிட்ட பணிகளில் ஈடுபடும் ஊழியர்களுக்கு ஒரு சிறப்பு ஊக்கத் தொகை வழங்கப்படும்.**
- **காஞ்சிபுரம் நகராட்சி இவ்விழா ஏற்பாடுகளை சிறப்பாக செய்ததை கருத்தில் கொண்டு அந்நகராட்சிக்கு ஏற்பட்ட செலவினத்தை ஈடுசெய்ய தமிழ்நாடு அரசு சிறப்பு நிதி வழங்கும்.**
- **பக்தர்கள் அதிக அளவில் காஞ்சிபுரம் நகரத்திற்கு தொடர்ந்து வருவதை கருத்தில் கொண்டு, பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய இடையூறுகளை தவிர்க்கும் வகையில் 13.8.2019, 14.8.2019 மற்றும் 16.8.2019 ஆகிய நாட்களில் காஞ்சிபுரம் நகரத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரிகளுக்கு மட்டும் உள்ளூர் விடுமுறை அளிக்கப்படும்.**
- **காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர், காவல் கண்காணிப்பாளர் மற்றும் பிற அலுவலர்கள் விழிப்புடன் பணியாற்ற வேண்டும்.**

இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம், மாண்புமிகு வனத்துறை அமைச்சர் திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு பள்ளிக்கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.ஏ.செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. பி.தங்கமணி, மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு. எஸ்.பி.வேலுமணி, மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயக்குமார், மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சர் திரு. கே.பி.அன்பழகன்,

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு. ஆர்.பி.உதயகுமார், மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் திரு. சேவூர் எஸ்.இராமச்சந்திரன், தலைமைச் செயலாளர் திரு. க.சண்முகம், இ.ஆ.ப., காவல்துறை தலைமை இயக்குநர் திரு. J.K.திரிபாதி, இ.கா.ப., உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் நிரஞ்சன் மார்டி, இ.ஆ.ப., சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா, இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் முனைவர் கொ. சத்யகோபால், இ.ஆ.ப., நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு. ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு. முகமது நசிமுத்தின், இ.ஆ.ப., போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே.மணிவாசன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை செயலாளர் டாக்டர் பீலா ராஜேஷ், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் திரு. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக ஆணையர் டாக்டர் டி. கார்த்திகேயன், இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் திரு. கே.பாஸ்கரன், இ.ஆ.ப., தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் டாக்டர் என்.சுப்பையன், இ.ஆ.ப., காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பி. பொன்னையா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9
நாள்: 07.08.2019